**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் :248/மா/2023**

**நாள் : 27/09/2023**

திரு.R.காதர்
வேலூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர் – எதிர்மனுதாரர்

வேலூர், இக்ராபள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு, கதவு எண்.18/A–1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R. காதர் என்பவரின் 05.08.2023 நாளிட்ட மனு 14.08.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 248/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

"வேலூர், இக்ராபள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு, கதவு எண்.18/A–1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R. காதர் என்பவர் தனது 05.08.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

வேலூர் மாநகராட்சியில் மண்டலம்–04ல் வார்டு 48ல் சின்ன அல்லாபுரம் மெயின்ரோட்டில் புதிய கால்வாய் அமைக்க ஒப்பந்தம் போடப்பட்டு கால்வாய் அமைக்க குழி தோண்டப்பட்டது. அங்கு ஏற்பட்ட விபத்து காரணமாக கால்வாய் பணி தொடராமல் நின்று விட்டது. இரண்டு வருடகாலமாக தோண்டப்பட்ட குழிகளை பொதுமக்கள் அவரவர் வீட்டிற்கு முன்பாகவும், கடைகளுக்கு முன்பாகவும் அவரவர் சொந்த செலவில் கால்வாய் கட்டியும் பல இடங்களில் கால்வாய் இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றது. தனக்கு வழங்கப்பட்ட RTI தகவலில் கால்வாய் அமைக்கப்பட்டது என பொய்யாக தகவல் கொடுக்கப்பட்டது என தெரிவித்துள்ளார். மேலும் பைபர் லைன் தெரு 4ல் கஸ்பா 4 மற்றும் குறுக்குத்தெருவில் புதிய சாலை அமைக்க ரூ.90 இலட்சம் ஒதுக்கப்பட்டது என்றும் 36 நாட்களில் முடிக்க நிர்ணயம் செய்யப்பட்டு சாலை

அமைக்க தோண்டப்பட்டது என்றும் 2 வருடம் ஆகியும் புதிய சாலை அமைக்கப்படவில்லை எனவும் இப்பொருள் தொடர்பாக ஆணையருக்கு மனுக்கள் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் இல்லை என்றும் குறிப்பிட்டு தரமான கால்வாய், சாலையை விரைவாக அமைக்கவும் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 24.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 07.09.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4. மனுதாரர் 07.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

"வேலூர் மாநகராட்சி மண்டலம் 4 வார்டு 48 சின்ன அல்லாபுரம் மெயின் ரோட்டில் புதிய கால்வாய் அமைக்க ஒப்பந்தம் போடப்பட்டு கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்றது. அங்கு ஏற்பட்ட விபத்து ஒன்றினால் கால்வாய்ப் பணி தொடராமல் நின்று விட்டது. இரண்டு வருடமாக அங்கு தோண்டப்பட்ட குழிகள் மூடப்படாததால், அங்கு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. மேற்படி பணிகள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விவரம் கோரப்பட்டதில், அங்கு பணிகள் முடிக்கப்பட்டதாக தவறான தகவலை எனக்கு அளித்துள்ளனர். அதே போன்று வேலூர் கஸ்பா குறுக்குத் தெருவில் புதிய சாலை அமைக்க ரூ.90 லட்சம் ஒதுக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்தில் மேற்கண்ட பணி ஒரு சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் முழுவதுமாக முடிக்கப்படவில்லை. இது குறித்து மாநகராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட கால்வாய் அமைக்கும் பணி குறித்தும், சாலைகளை சரிவர அமைக்காதது குறித்தும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. வேலூர் மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் 07.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் **ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:**

" மனுதாரர் தெரிவித்துள்ள வேலூர் மாநகராட்சி மண்டலம் 4 சின்ன அல்லாபுரம் பகுதியில் பனந்தோப்பு 2வது தெருவிலும், நல்லதண்ணீர்குளம் 1வது தெருவிலும் மட்டுமே மழைநீர் கால்வாய்ப்பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கோரிய சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு பகுதியில் கால்வாய் அமைக்கப்படவில்லை. மேற்கண்ட நிலுவையில் உள்ள கால்வாய்ப்பணிகள் முடித்திட வேண்டி ரூபாய் 55 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இன்னும் 6 மாதத்திற்குள் மேற்கண்ட கால்வாய் பணிகள் முடிக்கப்படும். மேலும் வேலூர் மாநகராட்சி கஸ்பா எடத்தெரு மற்றும் டையர்லைன் ஒரு பகுதி மற்றும் ஒரு சில இடங்களில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்டு பாதாள சாக்கடை திட்டப் பணி

முடிவடையும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட பகுதிகளிலும் தார்சலை 3 மாதத்திற்குள் அமைக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். '

மேலும் வேலூர் மாநகராட்சி மண்டல அலுவலரின் 05.09.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. வேலூர் மாநகராட்சி உதவி ஆணையர் தனது 05.09.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

வேலூர் மாநகராட்சி மண்டலம்–4ல் புதிய வார்டு எண்.48, பழைய வார்டு எண்.51, சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு பகுதியில் கால்வாய் அமைக்கப்படவில்லை; சின்ன அல்லாபுரம் பகுதி என்பது வார்டு 48, 42, 43 சேர்ந்த பகுதி ஆகும். இந்த மெயின்ரோடு பகுதியில் இருந்து குறுக்கு தெரு பகுதிகளான பழைய வார்டு எண்.51, புதிய வார்டு எண்.48 சின்ன அல்லாபுரம் பனந்தோப்பு 2வது தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு வார்டு குழு தீர்மானம் எண்.1536 நாள் 25.07.2016ல் மதிப்பீடு தொகை 4.00 லட்சம் மதிப்பீட்டில் திரு.V. கோட்டீஸ்வரன், ஒப்பந்ததாரர் மூலம் அப்பகுதியில் கால்வாய் அமைக்கப்பட்டு உள்ளது.

வார்டு எண்.52 சின்ன அல்லாபுரம் நல்ல தண்ணீர்குளம் 1–வது தெருவில் மழைநீர் கால்வாய் மதிப்பீடு 2.00 லட்சம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கால்வாய் அமைக்கப்பட்டு உள்ளது.

வார்டு எண்.51ல் சின்ன அல்லாபுரம் அப்பு கவுண்டர் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மன்ற தீர்மானம் எண்.1421 நாள் 17.12.2015ல் மதிப்பீடு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு திரு.V.கோட்டீஸ்வரன், ஒப்பந்ததாரர் மூலம் அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சின்ன அல்லாபுரம் பகுதியில் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளதை தவிர மெயின் ரோட்டில் கால்வாய் அமைக்கப்படவில்லை. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் சின்ன அல்லாபுரம் பகுதிகளான பனந்தோப்பு 1 முதல் 6 தெருக்கள், பலராம தெரு, அப்பு கவுண்டர் தெரு, நேதாஜி தெரு, நேருஜி தெரு, பழைய மசூதி தெரு, நல்ல தண்ணீர் குளம் ஆகிய எல்லா தெருக்களும் சின்ன அல்லாபுரம் மெயின் தெருக்களே. அதன் அடிப்படையில் பனந்தோப்பு மற்றும் நல்ல தண்ணீர் குளம் ஆகிய இரண்டு தெருக்களில் மொத்த மதிப்பீடு 11.00 லட்சம் மதிப்பீட்டில் தான் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளதே தவிர மனுதாரர் கூறிய மெயின்ரோடு கால்வாய் அமைக்கப்படவில்லை.

சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு (035048R2264) நீளம் 850.00 meter பனந்தோப்பு 2வது (035048R2236) நீளம் 150 meter பனந்தோப்பு 4வது தெருவில் (035048 2218) நீளம் 135 meter ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் (ம) 2 எண்ணிக்கை சிறுபாலம் அமைத்தல் பணி நீளம் 1135.00 மீட்டர் மதிப்பீடு ரூ.55.10 லட்சத்தில் 15வது நிதிக்குழு மானியம் 22–23 நிதியாண்டில் Tied Grant –ன் கீழ் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர்

அவர்களால் ந.க. எண்.18708.2022.சி.எப்.சி.1 நாள் 07.07.2023 அன்று அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மிக விரைவில் கால்வாய் அமைக்கப்படும்.

வேலூர் மாநகராட்சி மண்டலம் –04ல் வார்டு எண்.41 பகுதியில் பைபர்லைன் தெரு மற்றும் குறுக்கு தெரு பகுதியில் தார் சாலை அமைக்க சிறப்பு சாலை திட்டம் 20–21ல் சிப்பம் 21ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.D.அமுதராக அவர்களுக்கு பணி உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் பாதாள சாக்கடை முடிவுற்ற பகுதிகளான கஸ்பா எடத்தெரு மற்றும் பைபர்லைன் ஒரு பகுதி மற்றும் பொன்னியம்மன் பகுதியில் தார்சாலை அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் பாதாள சாக்கடை திட்டப்பணி முடிவடையாத நிலையில் இருந்ததால் பைபர்லைன் 4வது தெருவில் மற்றும் குறுக்கு தெரு சாலை அமைக்கப்படவில்லை. தற்சமயம் பாதாள சாக்கடை திட்டம் முடிந்துள்ளது. மிகவிரைவில் அப்பகுதிக்கு தார்சாலை அமைக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் வேலூர் மாநகராட்சி மண்டலம் 4, வார்டு 48, சின்ன அல்லாபுரம் மெயின் ரோட்டில் புதிய கால்வாய் அமைக்க ஒப்பந்தம் போடப்பட்டு கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்றது என்றும் அங்கு ஏற்பட்ட விபத்து ஒன்றினால் கால்வாய்ப்பணி தொடராமல் நின்றுவிட்டது எனவும் இரண்டு வருடமாக அங்கு தோண்டப்பட்ட குழிகள் மூடப்படாததால், அங்கு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது என்றும் மேற்படி பணிகள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விவரம் கோரப்பட்டதில், அங்கு பணிகள் முடிக்கப்பட்டதாக தவறான தகவலை தனக்கு அளித்துள்ளனர் என தெரிவித்து அதே போன்று வேலூர் கஸ்பா குறுக்குத் தெருவில் புதிய சாலை அமைக்க ரூ.90 லட்சம் ஒதுக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்தில் மேற்கண்ட பணி ஒரு சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் முழுவதுமாக முடிக்கப்படவில்லை. இது குறித்து மாநகராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட கால்வாய் அமைக்கும் பணி குறித்தும், சாலைகளை சரிவர அமைக்காதது குறித்தும் தேவையான நடவடிக்கை எடுத்திட கோரியுள்ளார்.

வேலூர் மாநகராட்சி உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் " மனுதாரர் தெரிவித்துள்ள வேலூர் மாநகராட்சி மண்டலம் 4, சின்ன அல்லாபுரம் பகுதியில் பனந்தோப்பு 2வது தெருவிலும், நல்ல தண்ணீர்குளம் 1வது தெருவிலும் மட்டுமே மழைநீர் கால்வாய்ப்பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கோரிய சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு பகுதியில் கால்வாய் அமைக்கப்படவில்லை. மேற்கண்ட நிலுவையில் உள்ள கால்வாய்ப்பணிகள் முடித்திட வேண்டி ரூபாய் 55 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இன்னும் 6 மாதத்திற்குள் மேற்கண்ட கால்வாய்ப் பணிகள் முடிக்கப்படும். மேலும் வேலூர் மாநகராட்சி கஸ்பா எடத்தெரு மற்றும் பைபர்லைன் ஒரு பகுதி மற்றும் ஒரு சில இடங்களில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பணி ஆணை

வழங்கப்பட்டு பாதாள சாக்கடை திட்டப் பணி முடிவடையும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட பகுதிகளிலும் தார்சலை 3 மாதத்திற்குள் அமைக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7( c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், மற்றும்

பிரிவு 12. (1 ) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely :-

( c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவரம் கோரப்பட்டதில் அங்கு பணிகள் முடிக்கப்பட்டதாக தவறான தகவல் மாநகராட்சி அலுவலர்கள் மனுதாரருக்கு அளித்துள்ளனர். வேலூர் கஸ்பா குறுக்குத்தெருவில் புதிய சாலை அமைக்க ரூ.90 லட்சம் ஒதுக்கப்படடது. ஒரு சில இடங்களைத்தவிர மற்ற இடங்களில் முழுவதுமாக முடிக்கப்படவில்லை என மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில் மாநகராட்சி அலுவலரும் மனுதாரர் கோரிய சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு பகுதியில் கால்வாய் அமைக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

மனுதாரரால் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை சிறப்பு ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் அவ்வறிக்கையில் ஏதேனும் முறைகேடு நடைபெற்றதாக குறிப்பிடப்படுமேயானால் அந்த முறைகேட்டிற்கு காரணமான சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

The Commissioner, Vellore is directed to issue appropriate instructions to the Zonal Officers to acquit themselves transparently while replying to RTI queries raised by the citizens of the area without ambiguity and making generalities like the present case where the petitioner alleges incorrect and misleading information by the

officers concerned while replying to his queries. This would prevent unnecessary dragging of issues such as this one.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.R.காதர்
   18/A–1, சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு,
   இக்ராபள்ளி அருகில்,
   வேலூர்–632 001
2. ஆணையர்,
   வேலூர் மாநகராட்சி,
   வேலூர்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
4. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
   571, அண்ணாசாலை,
   நந்தனம்,
   சென்னை – 600 035.
5. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
9/9